# சிறப்புக் கூட்டம்

அன்புடையீர்

வணக்கம். பல்லடம் நகர்மன்ற சிறப்புக்கூட்டம் வருகிற 24.07.2023 திங்கள்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் நகர்மன்றத்தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் நகர்மன்றக்கூட்ட அரங்கத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் : 01

கடந்த 30.05.2023 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் பொருள் எண் 20 பல்லடம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ள தகுதியான சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் / நிறுவனம் தேர்வு செய்தல் பணி குறித்தான தீர்மானத்தின் மீதான விவாதம் மற்றும் பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்தல்.

## 30.05.2023 அன்றைய சாதாரண கூட்ட பொருள் : 20

பல்லடம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ள தகுதியான சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் / நிறுவனம் தேர்வு செய்தல் பணியினை ரூ.390.91 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணிக்கு 23.05.2023ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு :—

1. M/S. Saram Enviro Services Private Limited, சென்னை
2. M/S. S.V.A Man Power Consultancy, சென்னை

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றும்,M/S. S.V.A Man Power Consultancy, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி இல்லாமலும் உள்ளது. எனவே, தொழில்நுட்ப தகுதி உள்ள M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி (Price bid) விலைப்புள்ளி உறை மட்டும் 27.05.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :—

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ள தகுதியான சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் / நிறுவனம் தேர்வு செய்தல் பணி | 390.91 | M/S. Saram Enviro Services Private Limited, சென்னை | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.79% அதிகம் (ரூ.5758/ஒரு டன்னுக்கு) |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களிடம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளுமாறு 27.05.2023 ஆம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இதில், மேற்படி நிறுவனம் ஒரு டன்னுக்கு ரூ.5650/— என்ற விலைவிகிதத்தில் பணி செய்ய சம்மதம் என தனது 27.05.2023 நாளிட்ட கடிதத்தில் அன்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட பணிக்கு, ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், 0.12% மதிப்பீட்டை விட குறைவாக உள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இரண்டாம் அழைப்பில் (Second call) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியாக உள்ளதாலும், திடக்கழிவு மேலாண்மை பணியாக உள்ளதாலும், மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக உள்ளதாலும் பொதுசுகாதார அவசியம் கருதி குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

//உண்மை நகல் //

மேற்கண்டவாறு 30.05.2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 15 பேர் ஆதரவு அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உண்மை நகல் .   தீர்மானம் எண் 131

| | |
|---|---|
| ஒப்பம்/– | ஒப்பம்/– |
| ஜெ.விநாயகம் | கவிதாமணி ராஜேந்திரகுமார் |
| ஆணையாளர், பல்லடம் நகராட்சி | நகர்மன்ற தலைவர், பல்லடம் |

மேற்கண்ட பொருள் குறித்தான தீர்மானத்தின் மீதான விவாதம் மற்றும் பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்தல் சிறப்புக்கூட்டத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தீர்மானம் :

பல்லடம் நகராட்சியில் இன்று 24.07.2023 மாலை 4.00 மணிக்கு சிறப்புக் கூட்ட பொருள் எண்:01 ன் மீதான விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் கலந்து கொண்ட 17 நகர்மன்ற உறுப்பினர்களில் (தலைவர் நீங்கலாக) 11 பேர் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர் மற்றும் 6 நகர்மன்ற உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | வார்டு எண் | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | வார்டு எண்:01 | திரு.சு.பாலகிருஷ்ணன் |
| 2 | வார்டு எண்:02 | திரு.செ.ராஜசேகரன் |
| 3 | வார்டு எண்:04 | திரு.சீ.சௌந்தரராஜன் |
| 4 | வார்டு எண்:06 | திரு.ப.ஈஸ்வரமூர்த்தி |
| 5 | வார்டு எண்:07 | திருமதி.து.கனகுமணி |
| 6 | வார்டு எண்:08 | திருமதி.ஜெ.சுகன்யா |
| 7 | வார்டு எண்:09 | திருமதி.க.பாமிதா |
| 8 | வார்டு எண்:14 | திருமதி.செ.ஈஸ்வரி |
| 9 | வார்டு எண்:15 | திருமதி.ப.விஜயலட்சுமி |
| 10 | வார்டு எண்:16 | திருமதி.ஆ.ருக்மணி |
| 11 | வார்டு எண்:18 | திருமதி.ச.சசிரேகா |